# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# எட்டாம் பத்து

## எட்டாம் திருவாய்மொழி - கண்கள் சிவந்து
## தனது கலவியை உறுதி பெற்றது ஆக்குவதற்காக ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை எம்பெருமான் காட்ட, ஆழ்வார் அதனைப் பேசுதல்

** கண்கள் சிவந்து பெரியவாய் *
வாயும் சிவந்து கனிந்து * உள்ளே
வெண் பல் இலகு சுடர் இலகு *
விலகு மகர குண்டலத்தன் **
கொண்டல் வண்ணன் சுடர் முடியன் *
நான்கு தோளன் குனி சார்ங்கன் *
ஒண் சங்கு கதை வாள் ஆழியான் *
ஒருவன் அடியேன் உள்ளானே 1

அடியேன் உள்ளான் உடல் உள்ளான் *
அண்டத்து அகத்தான் புறத்து உள்ளான் *
படியேய் இது என்று உரைக்கலாம்
படியன் அல்லன் * பரம்பரன் **
கடி சேர் நாற்றத்து உள்ளாலை *
இன்பத் துன்பக் கழி நேர்மை *
ஒடியா இன்பப் பெருமையோன் *
உணர்வில் உம்பர் ஒருவனே 2

உணர்வில் உம்பர் ஒருவனை *
அவனது அருளால் உறல் பொருட்டு * என்
உணர்வின் உள்ளே இருத்தினேன் *
அதுவும் அவனது இன்னருளே **
உணர்வும் உயிரும் உடம்பும் *
மற்று உலப்பிலனவும் பழுதேயாம் *
உணர்வைப் பெற ஊர்ந்து இறவேறி *
யானும் தானாய் ஒழிந்தானே 3

யானும் தானாய் ஒழிந்தானை *
யாதும் யவர்க்கும் முன்னோனை *
தானும் சிவனும் பிரமனும் ஆகிப் *
பணைத்த தனி முதலை **
தேனும் பாலும் கன்னலும் *
அமுதும் ஆகித் தித்தித்து * என்
ஊனில் உயிரில் உணர்வினில் *
நின்ற ஒன்றை உணர்ந்தேனே 4

நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு *
அதனுள் நேர்மை அது இது என்று *
ஒன்றும் ஒருவர்க்கு உணரல் ஆகாது *
உணர்ந்தும் மேலும் காண்பு அரிது **
சென்று சென்று பரம்பரமாய் *
யாதும் இன்றித் தேய்ந்து அற்று *
நன்று தீது என்று அறிவு அரிதாய் *
நன்றாய் ஞானம் கடந்ததே 5

நன்றாய் ஞானம் கடந்து போய் *
நல் இந்திரியம் எல்லாம் ஈர்த்து *
ஒன்றாய்க் கிடந்த அரும் பெரும் பாழ் *
உலப்பில் அதனை உணர்ந்துணர்ந்து **
சென்று ஆங்கு இன்ப துன்பங்கள் *
செற்றுக் களைந்து பசை அற்றால் *
அன்றே அப்போதே வீடு *
அதுவே வீடு வீடாமே 6

அதுவே வீடு வீடு பேற்று *
இன்பம் தானும் அது தேறி *
எதுவே தானும் பற்று இன்றி *
ஆதும் இலிகள் ஆகிற்கில் **
அதுவே வீடு வீடு பேற்று *
இன்பம் தானும் அது தேறாது *
எதுவே வீடு? ஏது இன்பம்? என்று *
எய்த்தார் எய்த்தார் எய்த்தாரே 7

எய்த்தார் எய்த்தார் எய்த்தார் என்று *
இல்லத்தாரும் புறத்தாரும்
மொய்த்து * ஆங்கு அலறி முயங்கத் * தாம்
போகும் போது ** உன்மத்தர் போல்
பித்தே ஏறி அனுராகம் பொழியும்
போது * எம் பெம்மானோடு
ஒத்தே சென்று * அங்கு உள்ளம் கூடக்
கூடிற்றாகில் * நல் உறைப்பே 8

கூடிற்று ஆகில் நல் உறைப்புக் *
கூடாமையைக் கூடினால் *
ஆடல் பறவை உயர் கொடி *
எம் மாயன் ஆவது அது அதுவே **
வீடைப் பண்ணி ஒரு பரிசே *
எதிர்வும் நிகழ்வும் கழிவுமாய் *
ஓடித் திரியும் யோகிகளும் *
உளரும் இல்லை அல்லரே 9

உளரும் இல்லை அல்லராய் *
உளரா இல்லை ஆகியே *
உளர் எம் ஒருவர் அவர் வந்து * என்
உள்ளத்துள்ளே உறைகின்றார் **
வளரும் பிறையும் தேய் பிறையும்
போல * அசைவும் ஆக்கமும் *
வளரும் சுடரும் இருளும் போல் *
தெருளும் மருளும் மாய்த்தோமே 10

** தெருளும் மருளும் மாய்த்துத் * தன்
திருந்து செம்பொற்கழல் அடிக் கீழ் *
அருளி இருத்தும் அம்மானாம் *
அயனாம் சிவனாம் ** திருமாலால்
அருளப்பட்ட சடகோபன் *
ஓர் ஆயிரத்துள் இப்பத்தால் *
அருளி அடிக் கீழ் இருத்தும் * நம்
அண்ணல் கருமாணிக்கமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**